## முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

## O.S. No. 292/2012

**Witness PW 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பெருமாள் | தொழில் | |
| த/பெ | அழவன் | வயது | |
| ஊர் | | தேதி | 29.10.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (29.10.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**5 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

நான் அரிசி ஆலையில் மேஸ்திரியாக பணியில் இருந்தேன் . எனது மனைவியின் பெயர் சின்னப்பொன்னு. எனது மனைவி ஆண்டிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர் என்றால் சரி. அஞ்சலையம்மாள் என்பவர் எனது மனைவியின் தாய்மாமன் மகள் என்றால் சரி . அந்த வகையில் அஞ்சலையம்மாள் என்பவர் எனக்குசகோதரி முறை என்றால் சரி . வழக்கு சொத்திற்கும்இருசன் என்பவரது வீட்டிற்கும்எவ்வளவு தூரம் என்று சொன்னால் பக்கத்தில் தான் உள்ளது. லட்சுமணன் என்பவரது பெயர் தெரியாது. லட்சுமணன் என்பவரது வாரிசுதாரர் எனக்கு தெரியும் . 4 ஆண்மகன்கள் , 2 பெண்கள் அவர்கள் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது . ஆறுமுகம் என்பவருக்கும் அஞ்சலையம்மாள் என்பவருக்கும்எங்கு வைத்து திருமணம் நடைபெற்றது என்றால் அது எனக்கு தெரியாது . ஆறுமுகம் எந்த வருடம் இறந்தார் என்பது எனக்குதெரியாது என்றால் சரி . லட்சுமணன் என்பவர் எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது என்றால் சரி .முருகன் என்பவர் எந்த ஊரில் பிறந்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் ஆண்டிப்பாளையத்தில் பிறந்தார் அவர் எங்கு படித்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் அண்ணாகிராமத்தில் படித்தார் . இருசன் மற்றும் புட்லாய்க்கு யார் யார் மகன்கள் என்றால் ஒரு மகன் 3 மகள்கள். இருசன் என்பவர் உயிருடன் இருக்கும்போது சாமிக்கண்ணு என்பவரிடம் வழக்கு சொத்தினை அடமானம் வைத்த விவரம்எனக்கு தெரியுமா என்றால் அடமானம் வைக்கவில்லை . இருசன் என்பவர் உயிருடன் இருக்கும்போதே வழக்கு சொத்தினை 1988 ம் வருடம் அடமானம் வைத்தார் என்றாலும் அது எனக்குதெரியாது என்று சொன்னாலும் சரியல்ல .

புட்லாய் என்பவர் அவருக்கு மற்ற சீதன பொருட்களை வைத்து அடமான கடனை பைசல் செய்தார் என்றால் சரி .இருசன் என்பவர் உயிருடன் இருக்கும்போதே பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது . இருசன் என்பவர் உயிருடன் இருக்கும்போதே அவரது மகன் பெயரில் தான செட்டில்மெண்ட் பத்திரம்எழுதி வைத்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. இருசன் என்பவர் எந்த வருடம் இறந்தார் என்பது எனக்கு தெரியாது . முருகன் மற்றும் புட்லாய்க்கு இடையே சொத்து சம்மந்தமாக என்ன பிரச்சனை நடைபெற்றது என்றால் வீட்டை விட்டு வெளியே போகுமாறு இருவரும் ஒருவரை பார்த்து ஒருவர் சொல்லிக்கொண்டனர் . பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியாது என்றாலும் முருகன் சொல்லியதன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தெரியாது . வழக்கு சம்மந்தமாக எனக்கு எந்த விவரம் தெரியாது என்றாலும் முருகன் அழைத்ததன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram